# இரண்டாம் பருவம் – மாதிரித் தேர்வு

## தமிழ் முதல் தாள்

**வகுப்பு : 9–ம் வகுப்பு** **மொத்த மதிப்பெண் : 60**

## பிரிவு–1

**அ) உரிய விடையத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **4x1 = 4**

**1.** சிறுபஞ்ச மூலத்தின் ஆசிரியர் பெயர்

அ) பாரதிதாசன் ஆ) காரியாசன் இ ) மாங்குடி மருதன் ஈ) புலவர் குழந்தை

**2.** 'யவனப்பிரியா'என்பது எதனைக் குறிக்கும்

அ) மிளகு ஆ) முத்து இ ) சங்கு ஈ) தந்தம்

**3.** பல்லவர் காலச் சிற்பங்களுக்குச் சிறந்த சான்று

அ) மாமல்லபுரம் ஆ) பிள்ளையார் பட்டி இ) திரிபுவன வீரேசுவரம் ஈ) தாடிக்கொம்பு

**4.** ஆழ்வார்கள் மொத்தம் எத்தனை பேர்

அ) 63 பேர் ஆ) 4 பேர் இ) 12 பேர் ஈ) 18 பேர்

**ஆ) கோடிட்ட இடத்தை நிரப்புக.** **4x1 = 4**

**5.** "பொதுவார்கள் பொலிவுறப் போர் அடித்திடும்" நிலப்பகுதி ______________.

**6.** "சூடிக்கொடுத்த சுடர்கொடி" என அழைக்கப்படுபவர் ______________.

**7.** ஏற்றுமதி, இறக்குமதி குறித்துக் கூறும் சங்க நூல்கள் ______________.

**8.** பாரதிதாசனின் இயற்பெயர்______________.

**இ) பொருத்துக.** **4x1 = 4**

**9.** சேரர் – மாங்குடி மருதன்

**10.** இராவண காவியம் – முத்துலட்சுமி

**11.** மதுரைக்காஞ்சி – முசிறி

**12.** அவ்வை இல்லம் – புலவர் குழந்தை

**ஈ) விடைக்கேற்ற வினா அமைக்க.** **2x1 = 2**

**13.** பேரறிஞர் அண்ணா தமிழிலும், ஆங்கிலத்திலும் மிகச்சிறந்த பேச்சாளராக விளங்கியவர்.

**14.** தமிழின் தொன்மையான இலக்கிய நூல் தொல்காப்பியம்.

## பிரிவு – 2

**அ. எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளி.** **3x2 = 6**

**15.** மூவாது மூத்தவர், நூல் வல்லார் – இத்தொடர் உணர்த்தும் பொருளைக் குறிப்பிடுக.

**16.** 'மதுரைக்காஞ்சி' – பெயர் காரணத்தைக் குறிப்பிடுக.

**17.** இறக்கும் வரை உள்ள நோய் எது ?

**18.** கண்ணன் புகுந்த பந்தல் எவ்வாறு இருந்தது ?

**ஆ) எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளி.** **3x2 = 6**

**19.** செப்புத் திருமேனிகள் பற்று குறிப்பு வரைக.

**20.** எதன் பொருட்டு கடற்பயணம் மேற்கொள்ளப்பட்டது ?

**21.** சாரதா சட்டம் எதற்காகப் போடப்பட்டது ?

**22.** நடுகல் என்றால் என்ன ?

**இ) எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி.** **2x4 = 8**

**23.** ஆண்டாளின் கனவுக் காட்சிகளை எழுதுக.

**24.** "மாகால் எடுத்த முந்நீர் போல " இடஞ்சுட்டி பொருள் விளக்குக.

**25.** விதைக்காமலே முளைக்கும் விதைகள் – இத்தொடரி ன் வழி சிறுபஞ்சமூலம் தெரிவிக்கும் கருத்துகளை விளக்குக.

**ஈ) எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி.** **2x4 = 8**

**26.** மருத்துவர் முத்துலட்சுமியின் சாதனைகளை குறிப்பிடுக.

**27.** காவிரிபூம்பட்டினம் குறித்து இலக்கியங்களில் இடம்பெற்ற கருத்துகள் யாவை ?

**28.** முழு உருவச் சிற்பங்கள் மற்றும் புடைப்புச் சிற்பங்கள் இரண்டிற்கும் இடையே உள்ள வேறுபாடு யாது ?

www.Padasalai.Net

**உ) எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி.** **2x6 = 12**

**29.** இராவண காவியத்தில் உங்களை ஈர்த்த இயற்கை எழில் காட்சிகளை விவரிக்க. **(அல்லது)**

குடும்ப விளக்கு நூலில் தலைவி பேச்சில் வெளிப்படும் பெண்கல்விக்கான கருத்துகளை இன்றைய சூழலுடன் ஒப்பிட்டு எழுதுக.

**30.** பண்டைய துறைமுகங்கள் பற்றி விவரித்து எழுதுக. **(அல்லது)**

நீங்கள் அறிந்த சாதனைப் பெண்கள் குறித்த சிறப்பம்சங்களை எழுதுக.

## பிரிவு – 3

**அடி மாறமல் எழுதுக.** **2+4= 6**

**31.** 'அடுக்கிய' எனை தொடங்கும் திருக்குறளை எழுதுக.

**32.** "கல்லிடைப் பிறந்த" எனத் தொடங்கும் இராவண காவியப் பாடலை எழுதுக.

**–ஆக்கம்–**

**சு.சண்முகம்**

**பட்டதாரி ஆசிரியர்**

**அரசு மேல்நிலைப்பள்ளி**

**வெள்ளார், சேலம் மாவட்டம்**